**கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் - 2020**

---

கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 04.03(அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. முன்னுரிமை போக்குவரத்துச் செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்துவதற்காக களனிப்பள்ளத்தாக்கு புகையிரத வரிசையை வடிவமைப்பதற்கான மதியுரை சேவைகளை வழங்குதல் எனும் பெயரிலான ஒரு கூறின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,853 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 11.36 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 1,405.05 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.69 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 448 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| பின்வருவனவற்றின் மதியுரை சேவை அறிக்கை<br>– சாத்தியவள ஆய்வு இறுதி அறிக்கை<br>– கொழும்பு தொடக்கம் றம்புக்கனை வரை, கொழும்பு தொடக்கம் களுத்துறை வரை, றாகம தொடக்கம் நீர்கொழும்பு வரை என்பவற்றிற்கான வரைவு இறுதி அறிக்கை மற்றும் கேள்வி ஆவணம் | 100 | 80 | செலாற்றலில் தாமதங்கள் | • உரிய கூட்டங்களுக்கு IESL பிரதிநிதிகள் இல்லாததால் IESL ஆல் ஏற்படுத்தப்பட்ட சில சிக்கல்கள் மற்றும் இந்த அபிவிருத்தி தொடர்பாக IESL உறுப்பினர்களின் எதிர்ப்புக்கள் மற்றும் மதியுரையாளர்கள் அவரது விளக்கத்தை சமர்ப்பிக்க கணிசமானளவு கால அவகாசம் எடுத்தமை.<br>• அத்துடன் கொவிட்-19 தொற்றுநோய் காலப்பகுதி காரணமாக களப்பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் முக்கியமான வெளிநாட்டு நிபுணர்களைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான சாத்தியக்கூறுகள் காணப்படவில்லை. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | நிதிக் கிரயம் எதுவும் இல்லாமல் 2021 சனவரி முதல் 2021 ஏப்ரல் வரை கால நீட்டிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு PMU ஆனது MOT மற்றும் ADB இற்கு அத்தகைய எந்தவொரு தாமதத்தையும் தெரிவிக்க வேண்டியிருந்தது. இந்த அனைத்துச் சிக்கல்களினதும் பின்னர் நீடிக்கப்பட்ட காலப்பகுதியின் போது இந்த மதியுரையின் கீழ் வருகின்ற நான்கு வரிசைகள் தொடர்பான அனைத்து அறிக்கைகளையும் சேகரிக்க முடிந்திருந்தது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | செயற்திட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

**2.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யூரோ 256,030 மற்றும் ஐ.அமெரிக்க டொலர் 6.48 மில்லியன் மற்றும் ரூபா 379.21 மில்லியனிற்குச் சமமான மதிப்பிடப்பட்ட கிரயத்தில் களனி பள்ளத்தாக்கு ரயில் பாதையை வடிவமைப்பதற்கான மதியுரை வசதிகளை வழங்குவதற்காக இச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், மீளாய்வு நிதியாண்டினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த 10 மதியுரை அறிக்கைகளில், KV வரிசைக்கான இறுதி சாத்தியவள அறிக்கை, கொழும்பிலிருந்து ரம்புக்கனை வரைக்கான வரைவு இறுதி அறிக்கை மற்றும் கேள்வி ஆவணங்கள், கொழும்பிலிருந்து களுத்துறை வரைக்கான வரைவு இறுதி அறிக்கை மற்றும் கேள்வி ஆவணங்கள் மற்றும் ராகம முதல் நீர்கொழும்பு வரைக்கான வரைவு இறுதி அறிக்கை மற்றும் கேள்வி ஆவணங்கள் என்பன 2020 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மதியுரை உடன்படிக்கையின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட விளைவு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2017 திசெம்பர் 13 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் வெளியீட்டு அறிக்கை ஆண்டின் இறுதியளவில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்கு மதியுரையாளரால் செயற்திட்டத்தால் கோரப்பட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018-2020 காலப்பகுதியின் போது களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதையின் இருபுறங்களிலும் உள்ள 2,036 அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை மூன்று வருட காலப்பகுதியினுள் மீள்குடியேற்றுவதற்காக வருடாந்த பாதீட்டில் ரூபா 9,600 மில்லியன் தொகையான ஒதக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவர்களுக்காக 386 வீட்டு அலகுகள் மாத்திரமே கையளிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நிர்மாணங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலைக்கான நிதிகளை வழங்கும் பொருட்டு புகையிரதப் பாதை வரிசையில் (railway ROW) மீள்குடியேற்றுவதற்கான அடிப்படைத் தேவைப்பாடொன்று உள்ளது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

## 2.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் இட ஒதுக்கீட்டு முறைமை ஆகியவை செயற்திட்ட நோக்கங்களின் முன்னோட்டத்தின் கீழ் வந்திருக்காத போதிலும் இருக்கை முன்பதிவு முறைமைக்கு ரூபா 4.83 மில்லியன் தொகையும் மீள்குடியேற்றத் திட்டத்தை தயாரிப்பதற்காக ரூபா 77.14 மில்லியன் தொகையும் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் செயற்திட்ட செலவினங்களாக காட்டப்பட்டுள்ளன. | REIP இன் கீழ் அமுல்ப்படுத்தப்பட வேண்டியுள்ள புகையிரத ஸ்மார்ட் டிக்கெட் மற்றும் இருக்கை முன்பதிவு முறைமைக்கான வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்காக மதியுரை சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ரூபா 4.92 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்திட்ட செயற்பாடுகளின் நோக்கெல்லை மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| கொழும்பை அண்டிய புகையிரத செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவின் 5 வருட காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அமெரிக்க டொலர் 0.50 மில்லியன் தொகையாகும். எவ்வாறாயினும், செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு ஐ.அமெரிக்க டொலர் 665,351 தொகையை செலவிட்டிருந்தது, இது இரண்டு ஆண்டுகளின் போது அக் காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட தொகையை ரூபா 30,822,782 இற்குச் சமமான ஐ.அமெரிக்க டொலர் 165,351 ஆல் விஞ்சியிருந்தது. | இது REIP செயற்திட்டத்தின் கீழ் முன்னோடி நிதி வசதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, எனவே PMU கிரயம் எதிர்வுகூறப்பட்ட ஐ.அமெரிக்க டொலர் 0.5 தொகையை விட அதிகமாக இருப்பதை நாங்கள் இனங்கண்டிருந்த போது PMU கிரயம் விஞ்சப்படுவது உடனடியாக நிறுத்தப்பட்டது. | செயற்திட்ட நிர்வாக கைநூலில் உள்ள பாதீட்டு ஒதுக்கீட்டின் பிரகாரம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |